# திராவிட மாடல் அரசின் 2 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் 2ம் ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் ஈரோடு வடக்கு மாவட்டம் பவானி நகரத்தில் மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் நகர கழக செயலாளர் ப.சீ.நாகராசன் முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்துசாமி கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக்கூறி சிறப்புரையாற்றினார். நிகழ்சியில் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, கிளைக்கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிடமாடல் அரசின் இரண்டாண்டு சாதனைகளை விளக்கி புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகம் அறந்தாங்கி நகர கழகம் சார்பில் அறந்தாங்கி கலைஞர் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு துறை அமைச்சருமான எஸ்.இரகுபதி கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்கள் . நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணைச் செயலாளர் ஞான. இளங்கோவன், அறந்தாங்கி நகர கழக செயலாளர் க. இராஜேந்திரன், அறந்தாங்கி தெற்கு ஒன்றிய கழக ஒன்றிய செயலாளர் பொன்.கணேசன், அறந்தாங்கி நகர்மன்ற தலைவர் இரா.ஆனந்த், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் தி.முத்து, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஹரி.விமலாதிராஜன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சக்திவேல், மாவட்ட இலக்கிய அணி தலைவர் சு.சத்தியசீலன் மற்றும் நகர,ஒன்றிய கழக நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.




அரியலூர் நகரத்தில் ககத் தலைவர்,தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்! உடன் நகரகழக செயலாளர் இரா.முருகேசன், ஒன்றிய கழக செயலாளர்கள் மா.அன்பழகன், வா.சௌந்தரராஜன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் நகர தி.மு.க. சார்பில்திண்டிவனம் காந்தியார் திடலில் நடைபெற்றதிராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன் நகர கழக செயலாளர் கண்ணன், அவைத்தலைவர் ரவிச்சந்திரன், மாவட்டபொருளாளர் ரமணன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.




சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்டம், உதகை நகர கழக சார்பில் நடைபெற்ற முதல்வர் – கழக தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினார்.



முதலமைச்சர் – தலைவர் அவர்களின் இரண்டு ஆண்டுகள் சாதனை விளக்க பொதுக்கூட்டம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், புதுக்கோட்டை வடக்கு ஒன்றியம், தொண்டைமான் ஊரணியில் ஒன்றிய கழக செயலாளர் ஆர்.ஆர். சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், தலைமைக் கழக பேச்சாளர் கவிஞர் பெர்னாட்ஷா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். தலைமைச் செயற்குழு உறுப்பினர் சு சண்முகம், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் எம்.எம்.பாலு, டாக்டர் செ.குறிஞ்சிவாணன், வி ஜி ஆர் மணிவண்ணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கலைஞர் கருணாநிதி, வை நடராஜன், ஒன்றிய கழக நிர்வாகிகள் வி.என்.எம்.பாலு, துரை, ரவிச்சந்திரன், சரவணன் மணிமாறன், பொன் செல்வராஜ், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னோடிகள், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.

வாரியத்தலைவராக

அமைச்சர் கயல்விழி செல்வராஜ் நியமனம்!

# தூய்மைப் பணியாளர் நலவாரியம் திருத்தி அமைப்பு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, மே .10-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 08.07.2021 அன்று நடைபெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆய்வுக் கூட்டத்தில், தூய்மைப் பணிபுரிவோர் நலவாரியத்தில் புதிய உறுப்பினர்களை நியமித்து வாரியம் திருத்தியமைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்திற்கு ஓர் உப தலைவர், 14 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் புதிய 12 அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டு இவ்வாரியத்தை திருத்தி அமைத்து அரசாணை (நிலை) எண்.61. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல(ஆதிந.6)த்துறை, நாள். 03.05.2023 -இல் ஆணையிடப்பட்டது.

அதில் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரியத்தின் தலைவராக அமைச்சர் கயல்விழி செல்வராஜ் நியமிக்கப் பட்டுள்ளார்.

உப தலைவர், இவர்களை தொடர்ந்து 14 புதிய அலுவல் சார்ந்த உறுப்பினர்களையும் 12 அலுவல் சாரா உறுப்பினர்களையும் அரசு நியமித்துள்ளது.

## பூவிருந்தவல்லியில் சாதனை விளக்கக்கூட்டம்!

திருவள்ளூர், மே.10–

பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றிய திமுக சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் கொசவன் பாளையம் ஊராட்சியில் ஒன்றியச் செயலாளர் டி.தேசிங்கு தலைமையில் நடை பெற்றது. இதில் மாவட்ட செயலாளரும், பால்வளத் துறை அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் சாதனைகளை விளக்கி பேசினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி, பேச்சாளர் ஜெ.சாமுவேல் தங்கம், நிர்வாகிகள் கே. ஜெ.ரமேஷ், ம.ராஜி, பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், ப.ச.கமலேஷ், தி.வே.முனுசாமி தி.வை.ரவி, ஒன்றிய குழு துணைத் தலைவர் பரமேஸ்வரி கந்தன், ஊராட்சி மன்ற தலைவர் சி.அண்ணாகுமார், ஒன்றிய கவுன்சிலர் வழக்கறிஞர் என். பி.மாரிமுத்து, ஒன்றிய நிர்வாகிகள் இ.கந்தபாபு, ஜெ.சாக்ரடீஸ், ஜி.சுகுமார், ப.கந்தன், கட்டத்தொட்டி எம். குணசேகரன், ஜி.சி.சி.கருணாநிதி, நடுகுத்தகை கே.சுரேஷ்குமார், எம். மோகன். வெள்ளவேடு கே.கோபிநாத், இ.வி.பி.பிரதீப் துணைத் தலைவர் லல்லி பாபு, ஜி.பி.பரணிதரன், எஸ்.ராமகிருஷ்ணன் வழக்கறிஞர் டி.மகா, டி.சகாயம், கே.சுப்பிரமணி, ஆர்.செந்தாமரை, ராஜேஷ், தே.அருண்குமார், எம்.விக்னேஸ்வரன், இ.அமுதன்,எம்.ஏழுமலை உள்பட பலர் உள்ளனர்.




முன்னாள் மாநில இளைஞரணி துணைச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான அன்பில் பொய்யாமொழி அவர்களின் 69வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அன்பில் பொய்யாமொழி திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து கிராப்பட்டி அன்பு நகர் இல்லத்தில் அமைந்துள்ள அன்பில் பொய்யாமொழி அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு மதிவாணன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கே என் சேகரன், வண்ணை அரங்கநாதன், மாவட்ட மாநகர நிர்வாகிகள் என்.கோவிந்தராஜ், லீலா வேலு, செங்குட்டுவன், மூக்கன், குணசேகரன், சந்திரமோகன், பொன்.செல்லையா, சரோஜினி, நூர்ஜகான், தமிழ்ச்செல்வன், மலைக்கோட்டை பகுதி கழகச் செயலாளர் மோகன், மற்றும் மாவட்ட மாநகர நகர பகுதி ஒன்றிய பேரூர் கழகங்களின் நிர்வாகிகள் செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தலைமையில் கும்பகோணம் – அரசு போக்குவரத்துக் கழக கோட்ட அலுவலக வளாகத்தில் ஓட்டுனர்கள் மற்றும் நடத்துனர்களுக்கான குளிரூட்டப்பட்ட ஓய்வறை திறப்பு விழா மற்றும் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. அரசு தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன், நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் எஸ். கல்யாணசுந்தரம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர்செ .ராமலிங்கம் ஆகியோர் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ்பொன்ராஜ் ஆலிவர் முன்னிலையில் கும்பகோணம் கோட்ட அலுவலக வளாகத்தில் ஓட்டுனர்கள் மற்றும் நடத்துனர்களுக்கான குளிரூட்டப்பட்ட ஓய்வறை திறப்பு விழா மற்றும் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

கடந்த ஆண்டை விட தேர்ச்சி விகிதம் அதிகரிப்பு!

# பிளஸ் 2 தேர்வு முடிவுகள்: 94.03% பேர் தேர்ச்சி!

## மாணவர்கள் 91.45% - மாணவிகள் 96.38% தேர்ச்சி!

சென்னை, மே 10-

தமிழ்நாட்டில் பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியான நிலையில், கடந்தாண்டை விட தேர்ச்சி சதவீதம் அதிகரித்துள்ளது.

பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் கடந்த மார்ச்13ம் தேதி முதல் ஏப்ரல் 3ம் தேதி வரை நடந்தது.

இந்நிலையில், 12ஆம் வகுப்பு தேர்வு முடிவுகளை, சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேற்று முன்தினம் வெளியிட்டார்.

கடந்தாண்டை விட தேர்ச்சி விகிதம் அதிகரித்துள்ளது. மொத்தம் 94.03 சதவீதம் பேர் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். மாணவர்கள் 91.45 சதவீதமும், மாணவிகள் 96.38 சதவீதம் பேரும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

பிளஸ் 2 பொதுத் தேர்வு முடிவுகள் வெளியான நிலையில், தமிழ் பாடத்தில் இருவர் 100 சதவீதம் மதிப்பெண் பெற்றுள்ளனர்.

ஆங்கிலப்பாடத்தில் 15 பேரும், இயற்பியல் பாடத்தில் 812 பேரும் 100 சதவீதம் மதிப்பெண் பெற்றுள்ளனர். வேதியியல் பாடத்தில் 3 ஆயிரத்து 909 பேரும், உயிரியல் பாடத்தில் ஆயிரத்து 494 பேரும் முழு மதிப்பெண் பெற்றுள்ளனர். கணிதம் பாடத்தில் 690 பேரும், தாவரவியல் பாடத்தில் 340 பேரும், விலங்கியல் பாடத்தில் 154 பேரும் 100 சதவீத மதிப்பெண் பெற்றுள்ளனர். கணினி அறிவியலில் 4 ஆயிரத்து 618 பேரும், வணிகவியல் பாடத்தில் 5 ஆயிரத்து 678 பேரும், கணக்குப்பதிவியலில் 6 ஆயிரத்து 573 பேரும், பொருளியல் பாடத்தில் ஆயிரத்து 760 பேரும், கணினி பயன்பாடு பாடத்தில் 4 ஆயிரத்து 51 பேரும். வணிக கணிதம், புள்ளியல் பாடத்தில் ஆயிரத்து 1,334 பேரும் 100 சதவீதம் மதிப்பெண் பெற்றுள்ளனர்.

### விருதுநகர் மாவட்டம் முதலிடம்!

12ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியான நிலையில், 97.85 சதவீத தேர்ச்சி பெற்று விருதுநகர் மாவட்டம் முதலிடத்தை பிடித்துள்ளது.

### 326 அரசுப் பள்ளிகள் 100% தேர்ச்சி!

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 7 ஆயிரத்து 533 மேல்நிலைப் பள்ளிகளில் 2 ஆயித்து 767 மேல்நிலைப் பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளதாகவும், இதில் 326 அரசு மேல்நிலைப்பள்ளிகளும் அடங்கும் என பள்ளிக்கல்வித்துறை தெரிவித்துள்ளது.

### திண்டுக்கல் மாணவி சாதனை!

பிளஸ்2 பொதுத் தேர்வில் அனைத்து பாடங்களிலும் முழு மதிப்பெண் பெற்று திண்டுக்கல்லைச் சேர்ந்த தச்சுத் தொழிலாளியின் மகள் நந்தினி சாதனை படைத்துள்ளார்.

சாதனை படைத்த மாணவி நந்தினியின் தந்தை சரவணகுமார் தச்சு தொழிலாளியாக உள்ளார். மாணவி நந்தினிக்கு ஊர் மக்களும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

### கிரிக்கெட் சேப்பாக்கத்தில் போக்குவரத்து மாற்றம்!

சென்னை, மே 10 -

சேப்பாக்கம் மைதானத்தில் வரும் மே 10, 14, 23 மற்றும் 24ம் தேதிகளில் நடைபெறவுள்ள ஐபிஎல் போட்டிகளின் காரணமாக, போட்டி முடிவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக போக்குவரத்து காவல் துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னைப் பெருநகர போக்குவரத்துக் காவல்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: ஐபிஎல் போட்டிகள் எம்.ஏ. சிதம்பரம் ஸ்டேடியத்தில் 10.05.2023, 14.05.2023, 23.05.2023 மற்றும் 24.05.2023 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளன. இப்போட்டி நடைபெறும் நாட்களில் போக்குவரத்தினைக் கட்டுப்படுத்த, போட்டி முடிவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு பின் வரும் போக்குவரத்து மாற்றங்கள் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. போர் நினைவிடத்தில் இருந்து வெளிச்செல்லும் அனைத்து வாகனங்களும் வாலாஜா பாயின்ட் வழியாக கொடிமரச் சாலை வழியாக அவர்களது இலக்கை அடையலாம்.

காந்தி சிலையில் இருந்து உழைப்பாளர் சிலை நோக்கி உள்வரும் வாகனங்கள் அனைத்தும் காந்தி சிலை அருகே திருப்பி விடப்பட்டு ஆர்.கே.சாலை வழியாக சென்று அவர்களது இலக்கை அடையலாம்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வை. மகாவிஷ்ணு

மே 10 (2007)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

திருவொற்றியூர் நகரத்தில் தொடர்ந்து முப்பதாண்டுகள் வட்டச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

திருவொற்றியூர் நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

1987 இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம், 1991 ரயில் மறியல் போராட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.